# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | |
|---|---|---|
| Case No | : STC No.396/2024 | Date: 30.10.2025 |
| Deposition of Witness for | : **பு.சா.1** | |
| Name | : **ராஜ்குமார்** | |

(எதிரி ஆஜர்).

**குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி** :-

1) எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் தொகையை எந்த வங்கியில் இருந்து எடுத்து கொடுத்தேன் என்றால் வீட்டில் வைத்திருந்த சேமிப்பு தொகையை கொடுத்தேன். எனது மாத சம்பளம் ரூ.40,000/-ம் ஆகும். எனது மாத சம்பளம் வங்கியில் தான் டெபாசிட் செய்யப்படும் என்றால் சில சமயங்களில் கையிலும் தருவார்கள், சில சமயங்களில் வங்கியிலும் போடுவார்கள். எனது குடும்பத்தில் மொத்தம் 05 உறுப்பினர்கள் உள்ளனர்.

2) பொதுவாக, மாதம் எவ்வளவு எனது குடும்ப செலவு ஆகும் என்றால் ரூ.20,000/-ம் ஆகும். மேற்படி, செலவு போக தான் மீதி எனது சேமிப்பு என்றால் சரிதான். முனியப்பன் கோவிலில் சீட்டு தொகையை எந்த மாதத்தில் எடுத்தேன் என்றால் சரியாக ஞாபகமில்லை. எதிரி கடன் கேட்டதாக சொல்லப்படும் தேதிக்கு பின்னர் தான் நான் சீட்டு தொகையை எடுத்தேனா என்றால் இல்லை, அதற்கு முன்னரே நிலம் வாங்குவதற்காக எடுத்து வைத்திருந்தேன், எந்த மாதம் சீட்டு எடுத்தேன் என்று ஞாபகமில்லை.

3) எந்த வருடம் வீடு கட்டிடேன் என்றால் 2021 - 2022ம் வருடத்தில் கட்டினேன். வீடு கட்டுதற்கான லோன் தொகையை எந்த வங்கியில் எடுத்தேன் என்றால் பஞ்சாப் நேஷனல் வங்கியில் ரூ.10 லட்சம் தொகையை எடுத்தேன். மேற்படி, தொகைக்கு மாதம் மாதம் எவ்வளவு லோன் கட்டி வருகிறேன் என்றால் ரூ.11,500/-ம் ஆகும். மேற்படி, லோன் தொகையை மாதம் மாதம் இன்றுவரை கட்டி வருகிறேன் என்றால் சரிதான். நான் வருமான வரி செலுத்தி வருகிறேனா என்றால் இல்லை. சுமார் 7-8 வருடங்களாக வருமான வரி கணக்கை (NIL) தாக்கல் செய்து வருகிறேன்.

4) எதிரி எங்கள் குடும்ப உறுப்பினர்களின் முன்னிலையில் தான் என்னிடம் பணத்தை பெற்றாரா என்றால் தோட்டத்து வீட்டில் வைத்து கொடுத்தேன். எனது வீட்டிற்கும், தோட்டத்து வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 02 கி.மீ தூரம் இருக்கும். எதிரியை எங்கு வந்து பணத்தை பெற்று கொள்ளுமாறு கூறினேன் என்றால் தோட்டத்து வீட்டிற்கு வரச்சொல்லி தான் பணம் கொடுத்தேன். எதிரிக்கு தோட்டத்து வீட்டில் வைத்து தான் பணம் கொடுத்தேன் என்று நான் எனது புகாரிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான், தற்போது தான் நீதிமன்றத்தில் சொல்கிறேன்.

5) உண்மையிலேயே, எதிரிக்கு தோட்டத்து வீட்டில் வைத்து தான் பணம் கொடுத்திருந்தால் அதனை நான் எனது புகாரிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியிருப்பேன் என்றும், தற்போது வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி எனது தந்தையிடம் தான் பணம் வாங்கியிருந்தார் என்றும், அவரிடம் தான் காசோலையை கொடுத்திருந்தார் என்றும், எனது தந்தை நீதிமன்றத்திற்கு வர

இயலாத காரணத்தினால் நான் காசோலையை எடுத்து நிரப்பி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

6) எனக்கும், எதிரிக்கும் இடையே எந்த பரிவர்த்தனையும் நடைபெறவில்லை என்றும், எதிரியை பழிவாங்கும் நோக்கில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கும், எதிரிக்கும் இடையே எந்த பரிவர்த்தனையும் நடைபெறாததால் தான் மேற்படி சங்கதிகளை நான் எனது புகாரிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு பொய் வழக்கு என்பதால் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

Sd/-Rajkumar

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.